# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 223/ந/2025, நாள் 23.01.2026

A.முஹம்மது மானு,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கூடலூர் நகராட்சி, கூடலூர்,
நீலகிரி மாவட்டம். – எதிர்மனுதாரர்

சென்னை, மண்ணடி, சவரிமுத்து தெரு, மூன்றாவது தளம், எண்.20/41 என்கிற முகவரியை சேர்ந்த திரு.A.முஹம்மது மானு என்பவரது 20.06.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.06.2025 அன்று பெறப்பட்டு, 223/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை, மண்ணடி, சவரிமுத்து தெரு, மூன்றாவது தளம், எண்.20/41 என்கிற முகவரியை சேர்ந்த திரு.A.முஹம்மது மானு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது 20.06.2025 நாளிட்ட புகார் மனுவுடன் அனுப்பியுள்ள 13.03.2025 நாளிட்டு கூடலூர் நகராட்சி ஆணையருக்கு அனுப்பியுள்ள மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"I am resident of Gudalur town Municipality and I am having 5 cents of vacant land at Kamarajar Nagar, Chungam Gudalur, The Nilgiris. I am writing to you as a concerned resident of Gudalur Nilgiris, to draw your attention to the rampant issue of encroachments on public roads within our locality. As someone who values the importance of efficient urban infrastructure and public safety, I urge you to take immediate action to address this pressing matter.

That, one Suresh s/o. late Krishnan residing at municipality residential ground floor at Kamarajar Nagar Chungam Gudalur who is working in Gudalur Town Municipality as labour/worker. Mr.Suresh has illegally occupied and constructed a cow shed on the side of the Municipality residential building, for his own cows/cattle growth and he is keeping the cows inside the cows shed and the cow's dung waste

dumping to my land and on the place of other neighbors vacant land. Due to the construction of cattle shed/cowshed on the side of Ground floor of the Gudalur Municipality employees residential building, the private patta land neighbors and including my vacant land who surrounding public habitat have to be live in the very bad pollutants and suffering, not only this troubles and problems to the surrounding residing peoples and also the encroachment on the roads and footbath has been obstructed to the entering pedestrian and vehicle and also no one can take their vehicles to their own residing place.

That, as well as one Mr.Ebrahim s/o Bari Bhai residing at the same area nearest Municipality residential Kamarajar Nagar Chungam Gudalur Mr. Ebrahim who is a mutton cutter is also illegally encroached and occupied constructed with iron and sheet shed has been encroached on the Government Panchayath public road for his goats/mutton cutting, for as butcher use for commercial purpose, using the public way for his mutton cutting and the bloods and wastage of goats dumping and throwing to the near neighbors private vacant lands including my land and this activities also violence of panchayath and Municipality law and illegal, the people of this area had been given complaint to the Gudalur Municipality authority Commissioner of Gudalur Municipality but, vein. till date the authority have not taken any action against the concern culprits 1.Mr.Suresh 2.Mrs.Bakiyam w/o Suresh and 3.Mr.Ebrahim.

That, not only the illegal encroach and occupied by the Gudalur Town Municipality labor/worker Mr.Suresh and his wife is made pollution to public people including me, they are grow the cows and bulls and illegally build up cattle shed and dumping the waste and cow's dung to nearby other private land including my land, a large quantity of cow's dung dumped and thereby accumulated in our patta land.

Over the past few months, the proliferation of encroachments on our public roads has reached an alarming level. These encroach ents not only obstruct the smooth flow of traffic but also pose significant hazards to pedestrians and commuters, and illegally parked vehicles on the center way and traffic obstructed between from the hospital/dispensary and behind Municipality residential area have become a common sight, leading to congestion and chaos on our streets.

Further, there were public road wide to pass such as lorries and heavy vehicles running for new construction material bring, in this path, but the Municipality worker encroached and making traffic obstruction made by the aforesaid people.

Furthermore, it is evident that some individuals are habitual offenders, repeatedly engaging in activities that contribute to the encroachment problem. Despite occasional drives by the authorities, these offenders continue to flout the law with impunity, exacerbating the situation for law-abiding citizens.

In light of the foregoing, I respectfully request the District authority to direct Gudalur Municipality administrative to take the following actions:

1.Conduct thorough surveys and inspections of mutton cutting on the public road by illegal construction of goat shed by Ebrahim in front of Ebrahim house to identify encroachments and unauthorized structures.

2.Promptly initiate the process of removing encroachments, ensuring strict adherence to legal procedures and regulations encroachment on Municipality residential building chungam Gudalur the construction of cowshed and road encroachment by Suresh S/o.late Krishinan who is working in Gudalur Municipality as Town labour.

3.Take stringent legal action within 15 days receipt of this complaint against habitual offenders, pollution free, including fines and penalties, to deter future violations.

I firmly believe that by addressing this issue proactively, we can significantly enhance the quality of life for residents and promote a safer and more efficient chungam Municipality environment in Gudalur.

I am hopeful that you will give due consideration to my concerns and take decisive action to resolve this matter at the earliest. Your leadership and intervention are crucial in ensuring the proper enforcement of laws and regulations govering public spaces.

Take stringent legal action against habitual offenders, including fines and penalties, to deter future violations.

Thank you for your attention to this urgent matter. I look forward to a positive response and meaningful steps towards improving the condition of our public roads". என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் கூடலூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) கூடலூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.1424/2021/எப்1, நாள் 04.11.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"புகார் மனுவில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 காமராஜர் நகர், சுங்கம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை திரு.சுரேஷ் மற்றும் திரு.இப்ராகிம் ஆகியோர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி இருவருக்கும் நகராட்சி அறிவிப்பு கடிதம் எண்.1424/2025/F, நாள் 15.07.2025 சார்வு செய்யப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டிருந்த இடம் அகற்றப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது".

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கூடலூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 25.11.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.11.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு.A.முஹமது மானு என்பவர் 25.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"திரு.சுரேஷ் என்பவர் கூடலூர் நகராட்சி குடியிருப்பு கட்டிடத்தையொட்டியுள்ள இடத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்து மாடுகளை வளர்த்து வருகிறார். மாட்டு சாண கழிவுகளை தனது நிலுத்திலும் அக்கம்பக்கத்தினர் காலி இடத்திலும் கொட்டி வருவதால் சுகாதார கேடுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் இவர் தனது

மாடுகளை பாதுகாப்பதற்கு ஏதுவாக மாடுகள் வளர்க்கும் இடத்திற்கு (compound wall) சுற்றுசுவர் எழுப்பி பராமரித்து வருகிறார். இதனால் அவசர தேவைக்கு ஆம்புலன்ஸ் போன்ற வாகனம் சென்று வரமுடியாதநிலை உள்ளது.

திரு.இப்ராஹிம் என்பவர் சுங்கம் நகராட்சி குடியிருப்பு பகுதியில் உள்ள பொது சாலையினை ஆக்கிரமித்து சட்ட விரோதமாக ஆடுகளை வெட்டி இறைச்சி கடை நடத்தி வருவதால் அச்சாலை அப்பகுதியில் வாகனங்கள், ஆம்புலன்ஸ் சென்று வர இயலவில்லை. வெட்டப்படும் வீணான இறைச்சி துண்டுகளை அக்கம்பக்கத்து காலியிடத்திலும் கொட்டி வருகிறார். இதனால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது.

மேற்படி விவரங்களை கூடலூர் நகராட்சியிடம் முறையிட்ட பின்னர் சுகாதார ஆய்வாளர் நேரடியாக வந்து புகாருக்குள்ளான இடத்தினை கள ஆய்வு செய்து திரு.சுரேஷ் என்பவர் ஆக்கிரமித்த ஆக்கிரமிப்புகளில் ஒரு பகுதியினை மட்டும் அகற்றியுள்ளனர். அதனை முழுமையாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திரு.இப்ராஹிம் என்பவர் ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்புகளையும் காவல்துறையினர் கொண்டு அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்க கூடலூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்".

6) எதிர்மனுதாரரான கூடலூர் நகராட்சி ஆணையரின் சார்பில் நகரமைப்பு ஆய்வாளர் 25.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

"மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள கூடலூர் நகராட்சி, வார்டு எண்.08 காமராஜர் நகர், சுங்கம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை திரு.சுரேஷ் மற்றும் திரு.இப்ராகிம் ஆகியோர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்து இருவருக்கும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 182(1) (2) மற்றும் 362–ன் கீழ் அறிவிப்பு கடிதம் சார்வு செய்யப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது. எனினும் மேற்படி இடங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதும் உள்ளதா என்பதனை நகர நில அளவையரைக்கொண்டு நில அளவை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அகற்ற நகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்".

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கூடலூர் நகராட்சி ஆணையரின்அறிக்கை, நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திரு.சுரேஷ் என்பவர் கூடலூர் நகராட்சி குடியிருப்பு கட்டிடத்தையொட்டியுள்ள இடத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்து மாடுகளை வளர்த்து வருகிறார் எனவும், மாட்டு சாண கழிவுகளை மனுதாரரின் நிலத்திலும் அக்கம்பக்கத்தினர் காலி இடத்திலும் கொட்டி வருவதால் சுகாதார கேடுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது எனவும், மேலும் இவர் தனது மாடுகளை பாதுகாப்பதற்கு ஏதுவாக மாடுகள் வளர்க்கும் இடத்திற்கு சுற்றுசுவர் (compound wall) எழுப்பி பராமரித்து வருகிறார் என்றும், இதனால் அவசர தேவைக்கு ஆம்புலன்ஸ் போன்ற வாகனம் சென்று வரமுடியாதநிலை உள்ளது எனவும், திரு.இப்ராஹிம் என்பவர் சுங்கம் நகராட்சி குடியிருப்பு பகுதியில் உள்ள பொது சாலையினை ஆக்கிரமித்து சட்ட விரோதமாக ஆடுகளை வெட்டி இறைச்சி கடை நடத்தி வருவதால் அச்சாலை மற்றும் அப்பகுதியில் வாகனங்கள், ஆம்புலன்ஸ் சென்று வர இயலவில்லை எனவும், வெட்டப்படும் வீணான இறைச்சி துண்டுகளை அக்கம்பக்கத்து காலியிடத்திலும் கொட்டி வருகிறார் எனவும் இதனால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது எனவும், மேற்படி விவரங்களை கூடலூர் நகராட்சியிடம் முறையிட்ட பின்னர் சுகாதார ஆய்வாளர் நேரடியாக வந்து

புகாருக்குள்ளான இடத்தினை கள ஆய்வு செய்து திரு.சுரேஷ் என்பவர் ஆக்கிரமித்த ஆக்கிரமிப்புகளில் ஒரு பகுதியினை மட்டும் அகற்றியுள்ளனர் எனவும் தெரிவித்து அதனை முழுமையாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் திரு.இப்ராஹிம் என்பவர் ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்புகளை காவல்துறையினர் கொண்டு அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்கக்கோரியும் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 காமராஜர் நகர், சுங்கம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை திரு.சுரேஷ் மற்றும் திரு. இப்ராகிம் ஆகியோர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி இருவருக்கும் நகராட்சி அறிவிப்பு கடிதம் சார்வு செய்யப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டிருந்த இடம் அகற்றப்பட்டுள்ளது என்பதை கூடலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மேலும் மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள கூடலூர் நகராட்சி, வார்டு எண்.08 காமராஜர் நகர், சுங்கம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை திரு.சுரேஷ் மற்றும் திரு.இப்ராகிம் ஆகியோர்களால் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் இருவருக்கும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 182(1) (2) மற்றும் 362–ன் கீழ் அறிவிப்பு கடிதம் சார்வு செய்யப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது என்பதும் எனினும் மேற்படி இடங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதும் உள்ளதா என்பதனை நகர நில அளவையரைக்கொண்டு நில அளவை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அகற்ற நகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 182(1) (2) மற்றும் 362–ன் கீழ் அறிவிப்பு கடிதம் சார்வு செய்யப்பட்டதாக நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 182(1) (2)–ல் ஆக்கிரமிப்பு அகற்றுதல் பற்றியதல்ல பிரிவு 128 ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்தாகும். மேலும், பிரிவு 362 மேற்கண்ட சட்டத்தில் இடம் பெறவில்லை. எனவே, இந்நேர்வில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன் உரிய சட்டப்பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்திடுமாறும், நகரமைப்பு ஆய்வாளர் நகர நில அளவையரைக்கொண்டு நில அளவை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு முழுமையாக அகற்றப்பட்டதை உறுதி செய்திடுமாறு கூடலூர் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இதுபோன்ற தவறுகளை இனி வருங்காலங்களில் தவிர்த்திடுமாறு அறிவுரை வழங்கி ஆணையிடப்படுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வவணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.A. முஹமது மானு,
வழக்கறிஞர்,
எண்.20/41, 3–வது தெரு,
சவரி முத்து தெரு, மண்ணடி,
சென்னை – 600 001.

2) ஆணையர்,
கூடலூர் நகராட்சி, கூடலூர்,
நீலகிரி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி, சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்